வெஸ்பா VESPA
உலகதரமிக்கது
இம்மாதம் முடிவில்
இறக்குமதியாகும்
ஸ்கூட்டர்களுக்கு
இன்றே பதிவு செய்யுங்கள்
எண்ணுக்கு ஏற்ற நிறம்...
மனதுக்கு ரம்மியம்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 20 ஆவணி 29 ஷவ்வா:10 இதழ்: 215
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14-9-78

திருமணங்களா?
திருவிழாக்களா?
பண்டிகைகளா?
உற்சவங்களா?

உங்கள் தேவைகளை
நிறைவு செய்வோம்
சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

# "என்னை விசாரணை செய்ய கமிஷனுக்கு அதிகாரமில்லை!"

## முன்னாள் பிரதமர் சிறிமா

### மேன்முறையீடு நீதிமன்றத்தில் மனு தாக்கல்

(கொழும்பு)

"ஜனாதிபதியின் விசேஷ ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க என்னை அழைக்கவோ அல்லது என்னை விசாரணைசெய்யவோ அல்லது எனது குடியுரிமையை எந்தவிதத்திலும் ரத்துச்செய்யவோ ஜனாதிபதியின் விசேஷ ஆணைக்குழுவுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை" என்று முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது சட்டத்தரணி மூலம் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா, தமது சட்டத்தரணி திரு. வி டபிள்யூ. குலரத்ன மூலம் இது குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளரிடம் மனுவொன்று தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவிலேயே மேற்படி குற்றச்சாட்டை அவர் சுமத்தியுள்ளார்.

"ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழு முன்னிலையில் என்னை அழைக்கவோ, விசாரணைசெய்யவோ, எனது குடியுரிமையை ரத்துச் செய்யவோ ஆணைக்குழுவின் மூன்று நீதியரசர்களுக்கும் உரிமை கிடையாது. என்னை இக் கமிஷன் முன்பாக அழைப்பதிலிருந்து தடைவிதிக்கவேண்டும் என்று கோருகின்றேன். நான் 1970 மே முதல் 1977 ஜூலை வரை இந்த நாட்டின் பிரதமராக இருந்திருக்கின்றேன். ஜனாதிபதி விசேஷ விசாரணைக் கமிஷன் சட்டம் 1978 பெப்ரவரியிலிருந்தே அமுலுக்கு வந்துள்ளது. இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னர் நடந்தவற்றை ஆராய்வதற்கு கமிஷனுக்கு அதிகாரம் கிடையாது" என்று தமது ரிட்மனுவில் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளார். (ம)

ஜனாதிபதி ஆணைக்குழு-

## நிஹாலின் இரண்டாவது விண்ணப்பமும் நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் நீதியமைச்சின் செயலாளர் திரு. நிஹால் ஜெயவிக்கிரம வெளிநாடு செல்வதன்பொருட்டு தமது கடவுச்சீட்டை (பாஜ்போட்) ஒப்படைக்குமாறு கேட்டு மனுச்செய்த விண்ணப்பத்தை ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று மீண்டும் நிராகரித்தது.

கடவுச்சீட்டு திரு. ஜெயவிக்கிரமவிடம் ஒப்படைக்கப்படுவது சிறப்பல்ல என்று அரசுதரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி திரு. ஏ. ஸி. டி. சொய்ஸா ஆணைக்குழுவிடம் ஆட்சேபம் தெரிவித்தார்.

திரு. ஜெயவிக்கிரம தமது விண்ணப்பத்தில் தமக்கு பிரிட்டனில் ஒரு வேலை கிடைத்துள்ளதாகவும் நாலுமாதங்களாகத் தாம் இவ்வேலையைச் செய்துள்ளதாகவும் 2 வருட ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் மீண்டும் வேலைக்குச்செல்லாவிட்டால் தாம் இப்பதவியை இழக்க நேரிடுமென்றும் தெரிவித்திருந்தார்.

திரு. ஜெயவிக்கிரம சமுகமளிக்காத நிலையில் தீர்ப்புவழங்குவதற்கு இடையூறாக இருக்கலாமென்பதால் கடவுச் சீட்டு வழங்கமுடியாதிருக்கிறது என்று தமது நிராகரிப்பின்போது ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். (உ)

## சுவீப் முடிவுகள்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பில் நேற்று இழுக்கப்பட்ட 679வது இலக்க சுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
**11 C 0356**
ரூபா 1,00,000.00

இரண்டாம் பரிசு
**21 O 0204**
ரூபா 40,000-00

மூன்றும் பரிசு
**17 H 0434**
ரூபா 10,000-00

நாவற்குழியில் நேற்றுக்காலை

# எண்ணெய் ரயில் தடம் புரண்டது

## இன்று இரவுமுதல் வழமையான சேவை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எண்ணை ஏற்றிக்கொண்டு வந்த ரயில், நாவற்குழிப் பாலத்திற்கு அண்மையில் நேற்றுக் காலையில் தடம் புரண்டது.

இதையடுத்து, யாழ்-கொழும்பு ரயில்சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை கொழும்பிலிருந்து எண்ணை ஏற்றிக் கொண்டுவந்த இந்த ரயில், நாவற்குழியை விட்டுப்புறப்பட்ட சிறிது நேரத்தில் காலை 10-45 மணியளவில் பாலத்திற்கும், அரசாங்கக் களஞ்சியத்திற்கும் அண்மையில் தடம் புரண்டது.

என்ஜினுடன், ஒரு சரக்கு ஏற்றும் வண்டியும், ஏழு எண்ணைத்தாங்கிகளும் பாதையை விட்டு விலகியுள்ளன. பாதுகாவலர்கள் பெட்டி மட்டுமே ரயில் பாதையில் இருந்தது.

இதையடுத்து எண்ணைத் தாங்கிகளிலிருந்து எண்ணையை அகற்றும் பணிகளில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த வண்டிகள் அவசர அவசரமாக ஈடுபட்டன.

தடம்புரண்ட எண்ணைத் தாங்கிகளிலிருந்து எண்ணைக் கசிவு ஏற்பட்டதையடுத்தே உடனடியாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்பகுதியில் பலத்த பொலிஸ்காவலும் போடப்பட்டுள்ளது.

தடம்புரண்ட ரயில்களைத் தூக்குவதற்கு கொழும்பிலிருந்து பாரந்தூக்கிகளை எதிர்பார்க்கப்படுகிறது. இப்பாரம் தூக்கிகள் வந்தபின்னரே ரயில் பாதை சீர்செய்யப்படும் என்று தெரிகிறது.

நேற்றுப் பகல் 11-55 கடுகதி ரயிலில் காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்குச் சென்ற பிரயாணிகள் யாழ்ப்பாணம் ரயில்நிலையத்திலிருந்து சாவகச்சேரி ரயில்நிலையம் வரை பஸ்ஸில் ஏற்றி அனுப்பப்பட்டனர்.

இதேபோன்று கொழும்பிலிருந்து யாழ்தேவியில் வந்த பிரயாணிகளும் சாவகச்சேரி ரயில்நிலையத்திலிருந்து யாழ் ரயில்நிலையம்வரை பஸ்மூலம் அனுப்பப்பட்டனா.

### இ. போ. ச.வுக்கு பாராட்டு

நேற்றுக்காலை எண்ணெய் ரயில் தடம்புரண்ட விபரம் அறிவிக்கப்பட்டதும் கடமையிலிருந்த யாழ். ரயில் நிலைய அதிபர் திரு. எஸ். மார்க்கண்டு உடனடியாகச் செயல்பட்டார். புகையிரத மேலதிகாரிகளுக்கு தகவல் அனுப்பப்பட்டு, ரயில்பிரயாணிகளுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களிலிருந்து அவர்களை விடுவிக்க இலங்கை போக்குவரத்துச் சபையினரின் சேவையை அவர் நாடினார்.

இதுபற்றி திரு, எஸ். மார்க்கண்டு நமது நிருபரிடம் தெரிவிக்கையில், இலங்கை போக்குவரத்துச் சபையினரின் உடனடி ஒத்துழைப்புக்கும் ஆதரவுக்கும் பெரிதும் நன்றிகூற வேண்டும் என்றார். யாழ்ப்பாண பஸ் டிப்போவுடன் தொடர்புகொண்டு விபரம் தெரிவிக்கப்பட்டதும் உடனடியாக பஸ்களைக்கொடுத்தனுப்ப அவர்கள் விருப்பம் தெரிவித்தது பாராட்டக்கூடியது. சொல்லில்மட்டுமல்ல அவர்கள் செயலிலும்காட்டி பஸ்களை அனுப்பிவைத்தார்கள். இதன் மூலம் பிரயாணிகளுக்கு எந்தவிதமான சங்டங்களும ஏற்படாதவண்ணம் ரயில்-பஸ் இணைப்புச் சேவை நடைபெற்றது" என்றும் திரு. எஸ். மார்க்கண்டு நமது நிருபரிடம் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் கொழும்பிலிருந்து வந்த யாழ்தேவி, சாவகச்சேரி புகையிரதநிலையத்தில் நிறுத்தப்பட்டது. காங்கேசன்துறை பிரயாணிகள், இ. போ. ச. பஸ் மூலம் யாழ்ப்பாணம் வரை அனுப்பிவைக்கப்பட்டனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

### ரயில் விபத்து! துரித வேகம் காரணமா?

நேற்றுக்காலை இடம்பெற்ற எண்ணெய் ரயில் தடம் புரண்டதற்கு ரயிலின் துரிதவேகம் ('ஓவர் ஸ்பீட்') காரணமாக இருக்கலாம் என்று விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

நேற்றைய ரயில்விபத்து குறித்து, ஸ்தலத்திலேயே உடனடி விசாரணை மேற்கொண்ட ரயில்வே பகுதி பிரதி பிரதம என்ஜினியர் திரு எஸ். பஞ்சாட்சரவேல் நமது நிருபரிடம் நேற்றிரவு தகவல் தெரிவிக்கையில், ரயில் தடம் புரண்டதற்கு நாசவேலை எதுவுமே காரணம் இல்லையென்றும், ரயிலின் துரிதவேகமே, தடம் புரண்டதற்குகாரணமாக இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட [இப்பகுதி ]ரயில்சேவை அநேகமாக இன்று பிற்பகல் முதல் வழக்கமான நிலைக்குத் திரும்பும் என்றும் இன்று புறப்படும் இரவு 'மெயில்' ரயில், நேரடியான சேவையில் ஈடுபடுமென்றும், பாதிக்கப்பட்ட பகுதியில், வேகம் குறைவாக ரயில்சேவை நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

செல்வச்சந்நிதி முருகன் ஆலய கோபுரத்தின் முன்வீதியில் அமைந்துள்ள ''மில்க் வைற்'' விளம்பர விற்பனைக் காட்சிச் சாலையில் ''மில்க் வைற்'' தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பையும், மேலுறைகளுக்கான அன்பளிப்புக்களும் வழங்கப்படும். மில்க் வைற்-யாழ்ப்பாணம். 0292

பெரிய புளியமரம் ஒன்று, இலுப்பை மரம் இரண்டு. க. சாம்பமூர்த்தி (ஆசிரியர்) சிவன் கோவிலடி, புத்தூர் மேற்கு. 0318

### தேவை

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நல்ல தண்ணீருடன் வீடு விலைக்குத் தேவை. வே. நடராசா, சட்டத்தரணி, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம். 0305

சேவிஸ் ஸ்ரேசனில் வேலை செய்து அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். நேரில் சமுகமளிக்கவும். லிங்கோ லுப்பிறிக்கேசன் சேவிஸ், பலாலி ரோட்டு கோண்டாவில். 0315

மூன்று வருடத்திற்குக்குறையாத அனுபவமுள்ள கார்ச் சாரதி உடனே தேவை. நேரில் வரவும். அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163 கண்டி வீதி, யாழ்ப்பாணம். 0314

### WANTED

Wanted a Engllsh Female Clerk. Credit in G. C. E. essential. Apply: Miss S. Rajakulendran, 215l20, Hospital Rd, Jaffna. 0320

### பருத்தித்துறை நகரசபை

## கேள்வி விளம்பரம்

மாட்டிறைச்சிக் கடை இல. 2.
சந்தை உள் கடையறைகள் இல. 47,56.
சந்தை வெளிக்கடையறைகள் இல. 16, 17, 18, 29.

மேற்குறிப்பிட்ட கடைகளை வாடகைக்குப் பெறவிரும்புவோர்களிடமிருந்து 1978-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27-த் திகதி முற்பகல் 10-00 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிணைப்பணம் ரூபா 150/-ம் பத்திரப்பணம் ரூபா 10/-ம் செலுத்தி 25-9-78 நண்பகல் 12-00 மணிவரை பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பத்திரப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

அன்ரன் அல்பிரட்
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை நகரம்.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை.
12-09-1978 0319

### ரதோற்சவம்
(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு புருதனை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா இம்மாதம் 15-ந் திகதியும் தீர்த்தத் திருவிழா 16-ந் திகதியும் நடைபெறவிருக்கின்றன. (அ)

## 'தமிழ் மக்கள் வாழ்வுக்கு ச.ச. நிலையங்களின் சேவை அவசியம்'

(யாழ்ப்பாணம்)

''தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் ஒளிமயமாக வேண்டுமானல் தமிழ் இனமும் தமிழ்மொழியும் தன்மானத்துடன் வளரவேண்டுமானல் வாழவேண்டுமானல் சனசமூக நிலையங்களின்சேவை தமிழ் பேசும் மக்களுக்கு என்றும் தேவை. எனவே நாம் அரசியல் கட்கிப்பேதம் பாராதுகிராமங்களின் தேவையைப் பெற்றுக் கொள்ள ஐக்கியம் தேவை'' இவ்வாறு கடந்த பொதுத்தேர்தலில் மானிப்பாய்த் தொகுதியில் ஐ. தே. கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. ஆர். எஸ். அலோசியஸ் ஆனைக்கோட்டை உயரப்புலம் ஐக்கிய சனசமுகநிலைய வெள்ளிவிழாக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகத் கலந்து கொண்டு பேசும் போது கூறினர்.

இக்கூட்டம் ஐக்கிய சனசமூக நிலையத்தலைவரும் யாழ். பொலிஸ் உத்தியோகஸ்தருமான திரு. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்றது.

திரு. அலோசியஸ் மேலும் பேசியதாவது: கடந்த 25 வருடகாலமாக மேற்படி சனசமுக நிலையம் கல்வி, அரசியல், கலை, பொருளாதாரத்துறைகளிலே உயரப்புல மக்களை உருவாக்கி இருக்கிறது. உயரப்புல மக்கள் அரசின் உதவியையோ தனிப்பட்ட ஸ்தாபனங்களின் உதவியையோ எதிர்பாராது தன்கையே தனக்குதவி என்பதற்கிணங்க வாழ்பவர்கள். மானிப்பாய்த் தொகுதியில் இயங்கும் சனசமூக நிலையங்களில் உயரப்புலம் ஐக்கிய சன சமூக நிலையமே முதலிடம் வகிக்கிறது. அத்துடன் கட்சி பேதம் பாராது வீறுகொண்ட வாலிப கூட்டம் ஐக்கிய சன சமூக நிலையத்தைத் திறம்பட இயக்குவது பெருமைக்குரியது.

அரச நன்கொடைப் பணத்தை ஏப்பம்விடாமல், தங்களது கிராம மக்களுக்குப் பல முன்னேற்றமான திட்டங்களையும் கலைநிகழ்ச்சிகளையும் அளித்துவருவதை பாராட்டாமல் இருக்கமுடியாது. ஒரே சமூகத்தைச் சேர்ந்தவன் என்ற ரீதியிலும் ஒரே மதத்தைச் சார்ந்தவன் என்ற அடிப்படையிலும், இக்கிராமத்துக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களுக்கு எமது தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினரான திரு. வி. தர்மலிங்கம் எடுக்கும் சகல நடவடிக்கை களுக்கும் எனது பூரண ஆதரவு உண்டு.

தமிழ் மக்களாகிய நாம் அரசியல் குருவளியிலே சிக்காது அனைவரும் ஐக்கியமாகத் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் விஷயங்களில் செயல்பட வேண்டும்'' இயக்குநர் திரு அன்ரன் உட்பட மற்றும் பலரும் பேசினர். (அ)

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

இலங்கை குடியரசின் பகிரங்க நம்பிக்கை பொறுப்பாளர் முன்னிலையில் தற்போது சாவகச்சேரி மர்வட்ட நீதிமன்றம்.

உரும்பிராய் தெற்கு உரும்பிராய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலம் சென்ற சுவாமிநாதர் தங்கராசா பெண் இரதிதேவி தங்கராசா என்பவரின் மரணசாதனமில்லா மரண சொத்தினதும் உடமைப்பொருட்களினதும் விடயத்தில் மரணமெய்தியவர் சாவகச்சேரி பொலிஸ் நிலைய வீதி 'புஸ்பா' எனும் இல்லத்தில் வசிக்கும் சுவாமிநாதர் தங்கராசா

விண்ணப்பக்காரன்

முன் இலக்கம். 419/T
மாவட்ட நீதிமன்ற
இல: 176/T

மற்றும்

1. தங்கராசா பரதன்
2. தங்கராசா இலக்ஸ்மன்
3. தங்கராசா சிரீ கணேசன்

எல்லோரும்.

புஸ்பா, பொலிஸ் வீதி சாவகச்சேரி. (பராயமடையாதவராக இருக்கும் காரணத்தால் அவர்களின் வழக்குப் பாதுகாவலன் 4ம் எதிர்வாதி மூலம்)

4. சுவாமிநாதர் இராசநாதன் யக்விலை தோட்டம், யக்விலை (வடமேற்கு மாகாணம்-N.W.P.)

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1978ம் ஆண்டு ஆவணி மாதம் 22ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக்கட்டளைப்படி

நீ. அருளப்பு
(ஒப்பம்)
பதிவாளர்

தயாரிப்பவர்

சு. கந்தசாமி
விண்ணப்பகாரனின்
சட்டத்தரணி. 0113

## வாரியாருக்கு நூல் அன்பளிப்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் யோகி கா. கார்த்திகேசுவினல் உரை எழுதப் பெற்று வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினரால் வெளியிடப்பட்ட கந்தரநுபூதி உரை நூல் திருமுருக கிருபானந்தவாரியாரிடம் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயிலில் நடைபெற்ற பிரசங்க நிகழ்ச்சியின்போது அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (உ)

## பரு. நீதவான் நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் 1(-30 மணிக்கு ஆரம்பமாகும்

செல்வச்சந்நிதி தேர் உற்சவம் காரணமாக சட்டத்தரணிகளின் வேண்டுகோளுக்கு இணங்க இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் அறிவித்துள்ளார். (கூ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



இலங்கைப் பல்கலைக் கழக வெளிநிலை தமிழ் மாணவர்களுக்கான நூலக நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டை யாழ் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் இழுக்கிறர். அருகில் வெளிவாரி பட்டப் படிப்பு நிறுவன இயக்குநர்கள் திரு. மா. குலேந்திரனும் திரு. ந. சோமசேகரமும் காணப்படுகின்றனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

Dr. பொன்னம்பலம் பரமசுவாமி,
காரைநகர் மேற்கு தற்பொழுது
66, காம்பெல் பிளேஸ், கொழும்பு.

வழக்காளி

வழ° இல. M. B. 12510

எதிராக

செல்லத்துரை குமரகுரு, வல்வெட்டித்துறை

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B/12510-ப் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள். 1978-ம் வருஷம் ஐப்பசி மாதம் 2-ந் திகதி (2-10-78) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம், அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 58015/-ம் 20-5-71 தொடக்கம் 28-1-72 வரைக்கும் ரூபா 40000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டில் கட்டப்பட்டது. 11-8-68ல் ரூ. 1200/- 19-11-71ல் 5000/- 19-6-73ல் 15000/- 17-5-76ல் 5000/- 16-7-76ல் 5000/-

### ஆதனவிபரம்

1935 வருஷம் பங்குனி மாதம் 21-ந் திகதி உத்தரவு பெற்ற அளவையாளர் அலோசியஸ்ஸால் 121-ம் படத்தில் துண்டு ஒன்றில் நிர ஒன்றும் குளி ஒன்று ஒன்பதில் பதினறும் (நிர 1 குளி 1, 9/16) தாங்கும் மதிப்பிலக்கங்கள் 22, 24, 26 பிரதான தெருவிலும் 51 முதலாம் குறுக்குத் தெருவிலும் (பழையது) புதிய மதிப்பிலக்கம் தங்கியிருக்கும் புதிய நம்பர்கள் 40, 46 பிரதான தெருவில் மேல் வீட்டுக் கட்டிடங்களும் கிணறும் தெற்கெல்லைச் சுவரில் வீடுகளுக்கு வெளியில் உள்ள அதற்குச் சேர்ந்தவை மற்ற எல்லாத்திலும் பின் கதவிலும் கிணற்றிலும் பயிர்களிலும் மற்ற எல்லாப் பயிர்களிலும் அரைவாசிப் பங்கும். வடமாகாணம் யாழ். டிஸ்திறிக் யாழ் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று யாழ். பட்டினம் 2-ம் பிரிவு இறை துண்டு ஒன்று எல்லை கிழக்கு C. முத்துக்குமாரு பெண் சிகிலீயாவின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு பிரதானதெரு, மேற்கு முதலாம் குறுக்குத் தெரு, தெற்கு சொல்லப்பட்ட துண்டு இரண்டு A. A. மாதருக்கும் உடையது. தற்பொழுது K. சங்கரப்பிள்ளைக்குடையது. ஆனல் 1963 வருஷம் கார்த்திகை மாதம் 14-ந் திகதி உத்தரவு பெற்ற அளவையாளர் C.C. குமாரசாமி தயாரித்த 447 படத்தின்படி நிர ஒன்று குளிஒன்று தசம் எட்டு ஆறு (நிர 1 குளி 1·86) யாழ்ப்பாணம் பதிவு இல. D 202/142 இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு சோனகன்தறை நிர. இரண்டரை (நிர. 2½) சாலையும் கட்டிடங்களும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் தொங்கவிருக்கும் மதிப்பிலக்கம் 34 பளசும் புதிய மதிப்பிலக்கம் 108, 110, 112, 114 புன்னலை ரோட்டு யாழ். மாநகர சபை எல்லைக்குள் எல்லை கிழக்கு K சுந்தரத்தின் ஆதனம் வடக்கு வண்ணை கதிரேசன் கோவிலாதனம், மேற்கு வண்ணை கதிரேசன் கோவிலாதனம், தெற்கு ரோட்டு ஆனல் 1963-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14-ந் திகதி உத்தரவு பெற்ற அளவையாளர் C C. குமாரசாமி தயாரித்த 448-ம் படத்தின்படி (நிர. 2 குளி 11·79) நிர இரண்டு குளி பதினென்றும் தசம் ஏழு ஒன்பது இதடங்கலில் சொரியலாக நாலில் ஒன்று யாழ். பதிவு இல. D 229/115.

எஸ். சங்கரப்பிள்ளை ஜே. பி.,
கொமிஷனரும் விலை மதிப்பாளரும்.

'வேல்பதி',
புத்தூர்,
25-8-78. 0317

## ...ரியில் ...ிறைவு

...பத்தியை அதி... தேவையைப் ...கொள்ள விவ... சாய அமைச்சர் சில திட்டங்களை வகுத்துள்ளார்.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து சுமார் 190 கோடி ரூபாய் கடன் உதவியும் கிடைக்கவிருக்கிறதாம்.

அமைச்சரின் யோசனைப்படி உடவளவ திட்டத்தின் தெற்குக் கரையில் 9,600 ஏக்கரிலும் ஹல்துமுல்ல, மொறனராகல, வெள்ளவாயா பகுதிகளில் 20,000 ஏக்கர் காணியிலும் கரும்பு உற்பத்தி செய்யப்படவிருக்கின்றது.

இத்திட்டங்கள் செயல்படத் தொடங்கியதும் 1984-ம் ஆண்டளவில் சீனித்தேவையில் 80 சதவீதம் பூர்த்தியாகிவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றதாம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலிருந்தபோது சீனியின் விலை அதிகரிக்கப்பட்டதினாலும், சீனிக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டதினாலும் உள்ளூரில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்தது. சிலர் சிறு அளவிலான சீனி உற்பத்தியிலும்கூட இறங்கினார்கள்.

வடபகுதியில் ஆய்வு முறையில் பனஞ்சீனி உற்பத்தியில் சிலர் ஈடுபட்டார்கள்.

அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட சீனியின் மாதிரிகள் கண்காட்சிகளிலும்கூட வைக்கப்பட்டிருந்தன.

இச்சீனி, நல்லமணமும், சுவையுள்ளதாகவும், இருந்தது. மேலும் உடல் நலத்துக்கும் இச்சீனி உகந்தது என்றுகூறப்பட்டது. ஆனல் துரதிருஷ்டவசமாக பெருமளவில் வியாபார முறையில் இதனை உற்பத்திசெய்வதில் எவரும்ஈடுபடவில்லை. உற்பத்தியில் ஏற்படும் சிரமங்களும், கட்டுப்படியாகாத செலவினங்களுமே இதற்கு முக்கிய காரணமாகும்.

வடபகுதியில் பல்லாயிரக்கணக்கான பனைமரங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்துவருகின்றன. ஏறத்தாழ 75 லட்சம் மரங்கள் இப்படி கிடப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது பதனீருக்காகவும், கள்ளுக்காகவும் சுமார் 3 லட்சம் மரங்கள்மாத்திரமே பயன்படுத்தப்படுவதாகத் தெரிகிறது.

எனவே பயன்படுத்தப்படாமல் கிடக்கும் இந்த மரங்களைப் பயன்படுத்தி பனஞ்சீனி உற்பத்தி செய்வதற்கான ஒரு திட்டத்தை அரசு ஆராய்வது மிகவும் நன்மை அளிப்பதாக இருக்கும் என்று கருதுகிறோம்.

பரீட்சார்த்தமாக முதலில் ஒரு சில ஆயிரம் மரங்களை பயன்படுத்திப் பார்ப்பதன் மூலம் வியாபார ரீதியில் பனஞ்சீனியை அதிக அளவில் உற்பத்தி செய்வது பற்றிய முடிவுக்கு வரலாம்.

முதலில் இதுபற்றி ஆராய்வதற்கு அமைச்சர் முன்வரவேண்டும். அமைச்சரை அக்கறை எடுக்கும்படி தூண்டவேண்டியது இப்பகுதி பிரதிநிதிகளின் கடமை.

பனஞ்சீனி உற்பத்தி வியாபார ரீதியில் பயன்தருமானல் இப்பகுதி மக்களின் பொருளாதார வளத்துக்கு மேலும் ஒரு படி உதவி புரிந்ததாக சம்பந்தப்பட்ட அனைவருமே மகிழ்ச்சியடைய முடியும்.

## இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 29-ந் திகதி வியாழக்கிழமை

(14-9-78)

**மேடம்:-** வாகனச் சொந்தக்காரர்களுக்குச் சிறப்பான தினம், ஆசிரியர்கள் வாழ்க்கையில் போற்றப்படுவார்கள். மாணவர்களாயின் கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு, பொதுத்துறைகளிலும் நாட்டம் உண்டு.

**இடபம்:-** வசதிகள் பெருகும், மற்றவர்களின் இன்னல்கள் கண்டு இரக்கப்படுவீர்கள், வாழ்க்கையும் வளமாகும், இன்று சுபநாள், புண்ணியயத்திரைக்குமிடமுண்டு.

**மிதுனம்:-** அதிகாரக் குறைவுக்கிடமுண்டு, அபாயகரமான தொழில்களில் ஈடுபடாதிருக்கவும், குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம், அவசரநடவடிக்கையைத் தவிர்க்கவும்.

**கடகம்:-** புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள், காதலர்களுக்கு கனகுஷியான தினம், சிலருக்கு திடீர்திருமணமும் இடம்பெறும், வரவேற்க வேண்டியநாள்.

**சிங்கம்:-** பிரச்சனைகள் மேலும் சிக்கலாகும், உணவு விடத்தில் பிரியக்குறைவு தென்படுங், கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று, உடல் நலனிலும் அதிக கவனம் வேண்டும்.

**கன்னி:-** நீண்டநாள் கனவு இன்று நனவாகும், பெரியோர்கள் உதவிக்கு வருவர், புண்ணியவிருப்பும், பொதுசனத் தலைமையுமுண்டு புகழும் வந்துசேரும்.

**துலாம்:-** கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், இடப்பிடமாற்றத்துக்கான ஆலோசனைகளும் உருவாகும், தெய்வத்தின் துணையுமுண்டு,

**விருச்சிகம்:-** நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு, எதிர்பாராதவகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும், சிறப்பான தினம்.

**தனுசு:-** விளைபொருள்களினால் பணம்விரயமாகலாம், ஆணவப்போக்கு மற்றவர்களின் வெறுப்பைத் தேடித் தரும், மட்டமானதினம்.

**மகரம்:-** இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும் சிறிய விஷபயத்திற்குமிடமுண்டு, பிள்ளை ஒன்றின் உடல்நலம் கவலையைத்தரலாம், தெய்வநம்பிக்கை வேண்டும்.

**கும்பம்:-** குடும்பத்தில் மகிழ்ச்சிக்கிடமுண்டு, விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல மாறுதல் ஏற்படும், அமைதிக்கும் இடமுண்டு.

**மீனம்:-** எதிலும் அவசரப் போக்கைக் கடைப்பிடிப்பீர்கள், தரக்குறைவான தகவல்கள் கிடைக்கக் கூடும், பெரியவர் ஒருவருடன் கருத்து வேற்றுமை தோன்றலாம். அடக்கம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## மணிவாக்கு

காகிதத்தினுல் செய்யப்பட்ட பூவும் அழகாகத் தான் இருக்கிறது. பக்தியில்லாதவன் இயற்றிய கவிதையும் அதுபோலத் தான்.

—ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி

# யாழ்ப்பாணத்தில் அவசியம் நாடக மண்டபம் தேவை

## கருத்தரங்கில் கலையரசு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முக்கியமாக ஒரு நாடக மண்டபம் தேவை. அதற்கான வழிவகைகள் செய்யவேண்டும்" என்று கலையரசு க. சொர்ணலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் சமீபத்தில் நடந்த நாடக அரங்க கல்லூரி முதல் நாள் கருத்தரங்கில் கலையரசு க. சொர்ணலிங்கம் மங்கள விளக்கேற்றி வைத்து கருத்தரங்கை ஆரம்பித்துவைத்துப் பேசினர். திரு க செல்வரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

கலையரசு சொர்ணலிங்கம் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

நாடகம் எங்கும் நடாத்தி வருகிறார்கள். ஆனல் நாடக இயக்குநர்கள் தாம் போன போக்கில் நடந்து வருகிறார்கள். நாடகக் கல்லூரியில் மாணவர்களுக்கு நடிப்புப் பயிற்சி அளித்து ஊக்குவிக்க வேண்டும். நமது ஊரில் நாடகம் பார்க்க பேசுகிறவர்களுக்காக, பேச்சுக்காக கூட்டம் வருகிறது. நடிகன் சரியாகப் பேசவேண்டும். வசனம் பேசுகையில் திறமையாக இல்லை. பேசும்போது அந்தந்த இடங்களுக்குஏற்ற வகையில் பேசவேண்டும்.சும்மாவசனங்களைப் பாடமாக்கிப் பேசுவதில் பயனில்லை. அர்த்தத்துடன் உணர்ச்சியுடன் பேசக் கற்றுக் கொடுக்கவேண்டும். நாடக நடிகர்களுக்காக நாடகக் கலாசாலையொன்று அமைக்கவேண்டியது அவசியம்.

### வீரசிங்கம் மண்டபம் ஏமாற்றிவிட்டது

யாழ். வீரசிங்கம் மண்டபம் கட்டப்படும்போது நாடகங்களுக்கு ஏற்ற அமைப்பாக இருக்கும் என நினைத்தேன். ஆனல் வேறுவிதமாக மாறிவிட்டது. இன்று உரிமையாளர்களும் மாறிவிட்டனர். அங்கே நாடகம் சரியாக நடிக்க வசதியில்லை.

மேக்கப் அறை அங்கு இல்லை அது வசதியாக இருக்க வேண்டும், மேக் அப் நாடகத்தில் மிகவும் முக்கியம். சில நாடகங்களில் முகம் வெள்ளையாக இருக்க கை கால் கறுப்பாகவிருக்கும். அப்படி ஏன் வேஷம் போடவேண்டும்.

(இக்கருத்தரங்கில்பேசியமற்றும் பலரது கருத்துக்களும் தொடர்ந்து வெளியிடப்படும்)

# 77 கலவரத்தில் ரூ. 25,000 நஷ்டமேற்பட்டதாம்

## சன்சோனிகமிஷன் முன் தர்மபுரம் சிங்களவர்த்தகர்

(கொழும்பு)

'தமிழ் பேசுற மக்களே. இங்கே இருக்கிற சிங்கள ஆட்களை அனுப்பி, நாங்கள் தனித்தமிழ்நாடு ஏற்படுத்தப்போகின்றோம். எங்களுக்கு ஆதரவு வேணும் எங்கட சின்னம் சூரியன். அதுக்கு முன்னல புள்ளடி போட்டு வாக்குத்தாருங்கள். 1958-ம் ஆண்டு கலாட்டாவில் சிங்கள ஆட்கள் தமிழ் மக்களுக்கு அடித்து அனுப்பியது உங்களுக்கு ஞாபகமில்லையா? இல்லை. நாங்கள் இங்கு இருக்கிற சிங்கள ஆட்களுக்கு அடித்து அனுப்பாம, அடித்துக் கொலைசெய்து, அவங்க இரத்தம் குடித்தால் தான் எங்கட மனதுக்கு நிம்மதி' என்று கடந்த வருட தேர்தல் காலத்தில் தர்மபுரத்தில் நடைபெற்ற ஒரு கூட்டணிக் கூட்டத்தில் பேசப்பட்டது.'

இவ்வாறு நேற்று சன்சோனி கமிஷன் முன்னிலையில் தர்மபுரத்தில் மரக்காலை, தளபாடக்கடை வைத்திருந்த பிரான்சிஸ் வீரசிங்க என்பவர் தமிழில் சாட்சியமளிக்கையில் கூறினர். சாட்சியை சட்டத்தரணி பாட்லட் குறுக்கு விசாரணை செய்தார். சாட்சி மேலும் கூறியதாவது:

'இக்கூட்டத்தில் கார்த்திகேசு ஆலாலசுந்தரம், புஷ்பராசா, ஆனந்த சங்கரி ஆகியோர் பேசினர். புஷ்பராசா தான் கூட்டத்தை ஒழுங்கு செய்திருநதார். நாங்களிருந்த வீட்டுக்கு அடுத்த வளவில் தான் இக்கூட்டம் நடைபெற்றது நாங்கள் ஒருமரக்குற்றியிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தோம். கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் எங்கள் வீட்டுக்கு கல்வீசப்பட்டது. இதன்பின்னர் ஒரு நாள் புஷ்பராசா என்னைச் சந்தித்து யாழ்ப்பாணத்தில் கலவரம் வரும் ஊரைவிட்டுப் போகும்படி கூறினர். எனது கடை, வீடு சேதப்படுத்தப்பட்டது. ஒரு லட்சத்து 25,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது. எனக்கு நிவாரணப் பணமாக 825 ரூபாய் மட்டுமே கொடுத்தனர்.'

## ஆசிரியருக்குக் கடிதம்:

## ஆண்களுக்கு குரோத எண்ணம் ஏற்பட்டுள்ளது

தற்போது இ. போ. ச. பஸ்கள் குறிக்கப்பட்ட நேரத்திற்கு ஒருமுறை ஓடாதபடியால் சிலவேளைகளில் பெறுமையாகவும் அதிக ஜன நெருக்கடி கொண்டதாகவும் இருக்கின்றது. குறிக்கப்பட்ட நேரத்திற்கு ஒருமுறை அவை சென்றாலும் குறிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமானவர்கள் ஏற்றப்படுவதால் ஜன நெருக்கடி ஏற்படுகின்றது இதனல் பெரிதும் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். தாய்மைப் பேறு எய்திய பெண்களும் மழலைகளுடன் வரும் தாய்மாரும் படும்பாடு சகிக்க முடியாததாய் இருக்கின்றது. பெண்களுக்கு என்று தனியாசனம் ஒதுககிய பின்னரும் இந்நிலைமை திருந்தியதாக தெரியவில்லை. மேலும் ஜன நெரிசலில் தவிக்கும் பெண்களுக்கு இடம் கொடுப்போர் தொகை பெருமளவு தற்போது குறைந்து விட்டது (பெண்களுக்கு தனிஆசனம் ஒதுக்கியமையால் ஏற்பட்ட குரோதமனப்பான்மை) இது போதாது என்று இப்படியான சந்தர்ப்பங்களில் பெண்கள் காடையர்களின் சேட்டைகளுக்கு ஆளாகி அவதிப்படுகின்றனர். இதை அனுமதிக்கலாமா? என்பதைப்பற்றி மனிதாபிமானமுள்ள தமிழ்மகன் ஒவ்வொருவனும் சிந்திக்க வேண்டும்.

எனவே பெண்களின் புனிதத்தைக் காக்கவும் அவர்களின்பரிதாபமான நிலையைப் போக்கும் வகையிலும் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். இதற்கு பெண்களுக்கு தனி பஸ் சேவையை ஒழுங்கு செய்வதன் மூலம்பரிகாரம் காணலாம் இதுசம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படியான ஒரு கைங்கரியத்தை செய்ய தடைகள் ஏதும் இருப்பின் விசேட பஸ்சேவைகள் நடக்கும் போது பெண்களுக்கு தனியான பஸ்சேவையை நடத்த வேண்டுகின்றேன். பாடசாலை மாணவிகளுக்கென தனியான பஸ்சேவை இருப்பது போல விசேட கச்சேரிகள் திருவிழாக்கள் போன்ற நேரங்களில் இதை நடத்தலாம்.

எஸ். சிவகுமாரன்
உரும்பிராய்

## நாடகமன்ற ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு சடார் நாடக மன்றம் தனது முதலாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது.

பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் திரு. க. பொ. இரத்தினம் பங்கு கொண்டார்,

இந்து இளைஞர் மன்றம் அண்ணா விவசாயக் கழகம் ஆகியவற்றின் ஆதரவுடன் நடைபெற்ற இவ்விழாவில் மாணவர்களுக்கான சமய அறிவுப் போட்டியில் பின்வருவோர் பரிசு பெற்றனர் செல்வன்கள் பொ. கணநாதன், சோ. ஸ்ரீனிவாசன், ம. மகேந்திரன், த வரதராஜன், செல்வி இ. மகாலெட்சுமி. (கூ-அ)

## புதிய கி. அ. சங்கங்கள்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் வலி தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இரு புதிய கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அண்மையில் வலி தென் மேற்குப் பிரிவு கிராம அபிவிருத்தி அதிகாரி திருமதி பி. சிவானந்தனல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

சில்லாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், மானிப்பாய்-கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவையே இப்புதிய சங்கங்களாகும்.

# புரே மோட்டர்ஸ் என்ஜினியரிங் கொம்பனி லிமிட்., - நல்லூர்

# ஓராண்டு நிறைவு தினம்

வட இலங்கையில் பொறியியல் விஞ்ஞானத் துறையில் புதிய சகாப்தத்தை உருவாக்கி பல தொழிலதிபர்கள், வாகனச் சொந்தக்காரர்கள், கடற்றெழிலதிபர்கள், விவசாயிகள் அனைவரதும் பேராதரவைப் பெற்று

## இன்றைய தினம் எமது நிறுவனம்

செப்டம்பர்

14

வியாழன் THURSDAY

1978

ஆவணி, 29 ஷவ்வா. 10

தமது இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்துவைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். கடந்த ஆண்டு எமக்கு ஆதரவு நல்கிய அன்பர்கள், தொழிலாளர்கள், பொறியியல் நிபுணர்கள், வாடிக்கையாளர், தொழிலதிபர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

உங்கள் அன்பில் திளைத்து, எம்வெற்றிக்கு உறுதுணையான அனைவருக்கும்

## ★ நன்றி ★

இவ்வாண்டில் எமது நிறுவனத்தில் புதிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இயந்திர சாதனங்கள் இறக்குமதியானதும் சேவை ஆரம்பமாகும்.

ENGINEERING IS OUR BUSINESS.

# PROMOTERS ENGINEERING COMPANY Ltd.

844, Pointpedro Road, Nallur, Jaffna.

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
**Friday Foster**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சிவாஜி—மஞ்சுளா
**மன்னவன் வந்தானடி**

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்
**சொல்லத்தான் நினைக்கிறேன்**

# யாழ். டிப்போ வைரவர் கும்பாபிஷேகம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச போக்குவரத்துச் சபை கோண்டாவில் சாலை ஸ்ரீ ஞான வைரவ சுவாமி கோவில் புனராவர்த்தன் மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது.

வைரவப் பெருமாளுக்கு கடந்த திங்கட்கிழமை முதல் விசேட கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

இன்று காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

நயினை பிரதம குரு சிவஸ்ரீ சிவாகம ஞானபானு சுவாமி நாதபரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் கும்பாபிஷேகத்தில் திரு முருக கிருபானந்தவாரியார் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசார்ய சுவாமிகள் துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

கோண்டாவில் பேருந்துச் சாலை இந்து ஊழியர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும். இக்கும்பாபிஷேகத்தில் விசேட மேளக் கச்சேரிகளும், இசைக் கச்சேரியும் நடைபெறும். (இ)

# பஸ்நிலையத்தில் சிறுவர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய பஸ் நிலையப்பகுதியில் பராரிகளாகத் திரியும் சிறுவர்கள் பணத்தைத் திருடி கைவரிசை காட்டுவதில் தீவிரம் காட்டி வருவதாக கவலை தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த சிலதினங்களுக்கு முன் தமது அரசாங்க அலுவலகக் கடமைக்குச் சென்று விட்டு பஸ்நிலையத்திற்கு வந்த யுவதி ஒருவரது கைப்பையில் நைசாகக் கைவிட்ட சிறுவன் ஒருவன் பணத்தைக் கையாடியதை அவதானித்த நபர் ஒருவர் சிறுவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டார்.

பணம் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலை நீடிப்பது பிரயாணிகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (உ)

# காளிகோவில் திருப்பணி

(நெல்லியடி)

நெல்லியடி காளி கோவில் மூலஸ்தான திருப்பணி வேலைகள் பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மல்லாகத்தைச் சேர்ந்த சிற்பாசிரியர் திரு. வீ. வைரமுத்து வேலைகளை பொறுப்பேற்று செய்துவருகின்றார். (உ)

# இளம்விவசாயிகள் கழகப் பிரதிநிதி

(சித்தன்கேணி)

யாழ். மாவட்ட இளம் விவசாயிகள் கழகத்தின தொல்புரம் பிரதிநிதியாக சித்தன்கேணியைச் சேர்ந்த திரு. தி. இராஜகுமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வட்டு, அபிவிருத்தி பாற்பண்ணைப் பொறுப்பாளராகவும் கடமையாற்றும் இவர் சித்தன்கேணி இளம் விவசாயிகள் கழகத் தலைவராகவும் வட்டு கிழக்கு தொடர்பு கமக்காரராக இருந்து வருகிறார். (இ)

# பஸ் சேவையின்றி மக்கள் அவதி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பின் வடபகுதியிலுள்ள மீன்பிடிப்பகுதியான பனிச்சங்கேணி, காயான் கேணி ஆகிய பகுதிகளுக்கான பஸ்சேவை நிறுத்தப்பட்டிருப்பதாக அறியவருகிறது. சமீபத்தில் பனிச்சங்கேணியில் பொதுமக்களுக்கும் இ. போ. ச. ஊழியர் சிலருக்குமிடையே நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவமே இதற்குக் காரணமெனக் கூறப்படுகின்றது.

மேற்படி பஸ் சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளமையால் ஓட்டமாவடி, இருல் ஓடை, காயாண்கேணி, திவுச்சேனை, மான்கேணிப் பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். (அ)

## வடஇந்திய மாநிலங்களில்

# 3 கோடி மக்கள் வெள்ளத்தால் பாதிப்பு

புதுடில்லி, செப். 13

வடஇந்திய மாநிலங்களில் ஏற்பட்ட பயங்கர வெள்ளப் பெருக்கினால் 3 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 1000க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர் என்றும் புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

பீகார், உத்தரப் பிரதேசம் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலேயே இப்போது வெள்ள அபாயம் அதிகரித்து வருகிறது. கங்கைநதி உடைப்பெடுத்து ஓடுவதனால் இம் மாநிலங்களில் வெள்ளம் அபாய அளவைத்தாண்டி பெருகிவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

'பராக்கா' அணைக்கட்டுப் பகுதி பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளதால் அங்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆறு இராணுவ அணிகள் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளையில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக பொதுமக்களும், வெளிநாடுகளும் பெருந்தொகை நிதி உதவியையும் மருந்து உணவு, உடை முதலிய உதவிகளை அளித்துவருகின்றனர்.

சிரியா இரண்டரை லட்சம் டாலர் பெறுமதியான உணவு வகைகளையும் உடை முதலியவற்றையும் வழங்கியுள்ளது.

ஆஸ்திரேலியா 1 லட்சம் டாலரை நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக வழங்கியுள்ளது. (இ)

# இந்திய - சீன உறவுகுறித்து மாஸ்கோவில் வாஜ்பாய்

மாஸ்கோ, செப். 13

அடுத்த மாதம் தாம் மேற்கொள்ள இருக்கும் பீக்கிங் விஜயம், சீன இந்திய நட்புறவை மேலும் வளர்க்கப் பேருதவியாக இருக்கும் என்று இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. ஏ. பி வாஜ்பாய் மாஸ்கோவில் தெரிவித்தார்.

இந்திய-ரஷ்ய பொருளாதார உறவு குறித்து பேச்சு நடத்துவதற்காக மாஸ்கோவுக்கு விஜயம் செய்திருந்த திரு. வாஜ்பாய் ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின், அதிபர் திரு. பிரஷ்னேவ், வெளிநாட்டு அமைச்சர் திரு. குரோமிக்கோ ஆகியோருடன் பேச்சு நடத்தினர்.

ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினுடன் பேச்சு நடத்தியபோதே திரு. வாஜ்பாய் தமது சீன விஜயம் பற்றி கருத்துத் தெரிவித்தார்.

தாம் சோவியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் பொருளாதார அரசியல் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்றும் திரு. வாஜபாய் கருத்துத் தெரிவித்துள்ளார். (இ)

## காம்ப்டேவிட் பேச்சுவார்த்தை:

# இஸ்ரேலும் எகிப்தும் விட்டுக்கொடுத்தும் முடிவில்லை

மேரிலண்ட், செப். 13

சாம்ப்டேவிட்டில் நடைபெற்று வரும்மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் எகிப்திய அதிபா ஜனுப் அன்வர் சதாத்தும் இஸ்ரேலியப் பிரதமர் திரு பெகினும் சில விடயங்களில் விட்டுக்கொடுத்துள்ள போதிலும் இன்னமும் தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளையில் இப்பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலகுவாக இஸ்ரேலியப் பிரதமர் புதிய யோசனைகளைத் தெரிவித்துள்ளார்

அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகாட்டரும் எகிப்திய அதிபர் ஜனுப சதாத் இஸ்ரேலின் புதிய யோசனைகளை தனித்தனியே ஆராய்துள்ளனர். என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் ஜனதிபதி திரு. கார்ட்டர் நேற்று மூன்றாவது தடவையாக எகிப்திய அதிபர் ஜனுப் சதாத்தைச் சந்தித்து உரை நிகழ்த்தினர். (இ)

# மலை இடுக்கில் ஜீப்: 8 பேர் பலி!

புதுடில்லி, செப். 13

மேகாலயாவில் ஜீப் ஒன்று குடைசாய்ந்து 200 அடி ஆழமான மலை இடுக்கில் விழுந்ததை அடுத்து ஜீப்பில் பயணம் செய்த 8பேர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

ஜீப்பில் பயணம் செய்த மிகுதி . ஐவரும் காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். (இ)

# மாஸ்கோவில் தமிழறிஞருக்கு விழா

மாஸ்கோ, செப். 13

மாஸ்கோவிலுள்ள முன்னேற்ற பதிப்பகத்தை பிரபல தமிழ் மொழிபெயர்ப்பாளரான பூரணம் சோமசுந்தரத்தின் 60வது பிறந்ததின விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

சோவியத் யூனியனில் 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிவரும் திரு. சோமசுந்தரம், மார்க்ஸிஸ-லெனிஸிச நூல்கள் பலவற்றை தமிழாக்கஞ் செய்துள்ளார்.

திருக்குர்ஆன் சிலப்பதிகாரம் போன்ற நூல்களையும் பாரதி பாடல் களையும் ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்துள்ள இவர் தமிழ்-ரஷ்ய ரஷ்யதமிழ் அகராதிகளைத் தொகுப்பதில் தலைமையாசிரியாகத் திகழ்ந்துள்ளார். (இ)

# சாராயம் கைப்பற்றினர்

(வவனியா)

இ. போ. ச. பஸ் வண்டியில எடுத்துச் செல்லப்பட்ட சாராயம் திடீர் பரிசோதனைக் குழுவினரால் கைப்பற்றப்பட்டது வவனியா-மன்னார் வீதியில் பஸ் வண்டி ஒன்றை மறித்து சோதனைக்குழுவினர் பஸ்ஸிலிருந்த நபரொருவரை அளவுக்குக் கூடுதலான சாராயத்துடன் கண்டுபிடித்தனர். சந்தேக நபரையும் சாராயத்தையும் பரிசோதனைக்குழுவினர் முருங்கன் பொலிசாரிடம் ஒப்படைத்தனர். (உ)

வெற்றி முரசு கொட்டும் 2வது வாரம்!
**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642.
தினசரி 10-15, 2-15, 6-15, 10-00
ரஞ்சன், ரி. ஆர். ராஜகுமாரி நடித்த
**சந்திரலேகா** (புத்தம் புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
**உத்தமன்** (ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் - தேவிகா நடித்த
**சாந்தி**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-விஜயகுமார் ஜெய்சித்ரா-தங்கவேலு
**பொண்ணுக்கு தங்கமனசு** (புதிய பிரதி)

**REGAL** Jaffna 5th&LASTCROWDEDWEEK
Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
**THE CASSANDRA CROSSING**
All passes and Concessions Suspended

கடைசி வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன் நடித்த
**பேரும் புகழும்**

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
**இது சத்தியம்**
15-9-78 முதல் ஆலயமணி (புதியபிரதி)

**லிடோ** (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
**தாய்க்குத்தலைமகன்**

இரு தினங்கள் மட்டும்
**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - வைஜந்திமாலா
**சித்தூர் ராணி பத்மினி**

சம்பளப்பணம் கொள்ளை:

# அடையாள அணிவகுப்பு நடத்த நீதிபதி அனுமதி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மகளிர்கல்லூரி ஆசிரியைகளின் சம்பளப்பணம் கொள்ளை தொடர்பான அடையாள அணிவகுப்பை நடாத்த பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் நேற்று அனுமதியளித்தார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்றுக்காலை இவ்வழக்கு கூப்பிடப்பட்டபோது பருத்தித்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு ஜெயசேகரா அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு அனுமதி கோரியிருந்தார். கடந்த தவணையின்பொது நீதிபதி கட்டளையிட்டபடி பொலிஸார் நேற்றுக்காலை இவ்விசாரணை தொடர்பான அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருந்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜி, ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) ஆர். ஸ்ரீசிவாயா. ஆர். பரமகுரு, எம். வேலும்மயிலும், சிவா பாலேந்திரா, என். கிருஷ்ணராசா, கே. இரத்தினசிங்கம், திருமதி அருச்சுனு, எஸ். இராமச்சந்திரன், வி. அருமைநாயகம், எம். ராஜகுலேந்திரன். வி. யோகசிகாமணி ஆகியோர் ஆஜரானுர்கள்.

## சட்டத்தரணி வாதம்

"பருத்தித்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. ஜெயசேகரா, அடையாள அணிவகுப்பு நடத்த அனுமதி கோரியபோது, சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் ஆட்சேபம் தெரிவித்து. சட்டப்படி அணிவகுப்பு வைக்கமுடியுமா இல்லையா? என்பது பற்றி முதலில் தீர்மானிக்க வேண்டும் என்றும், சட்டத்தின்படி ஒரு அடையாள அணிவகுப்பு நடத்த விரும்பினுல் சந்தேகநபர்களின் பெயர்களும், சாடசிகளின் பெயர்களும் அறிக்கையில் காட்டப்பட்டிருக்கவேண்டும் என்ருர்.

அறிக்கையில் சந்தேகநபர்களில் ஆறு பேரின் பெயரும், சாட்சிகளாக ஒன்பது பேரின் பெயரும் காட்டப்பட்டிருப்பதாக நீதிபதி திரு. கே.ஞானச்சந்திரன் தெரிவித்து விண்ணப்பம் சரிவரச் செய்திருப்பதால் அடையாள அணிவகுப்பு நடாத்த அனுமதிப்பதாகவும் கூறினுர்.

இரண்டாவது அடையாள அணிவகுப்பொன்றும் நடாத்த விரும்புவதாக பொறுப்பதிகாரி திரு. ஜெயசேகரா தெரிவித்தார்.

இரண்டாவது அடையாள அணிவகுப்பு நடாத்துவதைத் தான் ஆட்சேபிப்பதாகக்கூறிய சட்டத்தரணி ஜி, ஜி. பொன்னம்பலம். அதறகான க்ாரணத்தையும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இவ்வழக்கு தொடர்பாக றிமாண்டிலிருக்கும் சந்தேகநபர்களும், பின்னர் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் இருவரும் ஒன்ருக இருப்பதாக தான் சிறைச்சாலைக்குச் சென்றபோது சந்தேகநபர் ஒருவர் தெரிவித்ததாகவும், கடந்த திங்கட்கிழமை பிற்பகல் எல்லோரும் ஓரிடத்தில் இருந்ததாக அவர் கூறியதாகவும் திரு. பொன்னம்பலம் நீதிபதியிடம் தெரிவித்தார்.

5-ம் தேதிவரையும் றிமாண்டில் வைக்க உத்தரவிட்டபோது 6 சந்தேகநபர்களையும் பின்னர் கைதான 2 பேரையும் வெவ்வேறு இடத்தில் வைக்கும்படி அறிவித்ததாகவும் தெரிவித்த நீதவான் இது பற்றி பருத்தித்துறை பொறுப்பதிகாரி உடனடியாக, சிறை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தமக்கு அறிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்.

## நீதவான் கருத்து

அடையாள அணிவகுப்பு பற்றி நீதவான் தெரிவிக்கையில் கூறியதாவது; யாழ்ப்பாணத்தில் அடையாள அணிவகுப்பு நடத்துவது பற்றி நான் தீர்மானிக்கமுடியாது. பொலிஸார், யாழ்ப்பாணம் நீதவானிடம் விண்ணப்பம் செய்யவேண்டும். அவர் தீர்மானித்தால் யாழ்ப்பாணத்தில் வைக்கலாம். அவர் மறுத்தால், பருத்தித்துறையில் நாளை அணிவகுப்பு நடக்கும்.

சட்டத்தரணி ஆர். ஸ்ரீ சிவாயா: யாழ்ப்பாணத்தில் அடையாளஅணிவகுப்பு நடத்துவதற்கு சட்டம் இடம் கொடுக்காது. பருத்தித்துறையிலேயே அடையாள அணிவகுப்பை வைக்கவேண்டும்.

சட். ஜி. ஜி. பொன்னம்பலம்; பருத்தித்துறை அடையாள அணிவகுப்பு நடத்த சரியான இடம், இந்த வழக்கில் சாட்சிகள் அத்தனை பேரும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள். அவர்களை யாழ்ப்பாணம் கொண்டு போவதாலுல் நேரம் நீடிக்கும். சிலசமயம் இரவு முழுவதும் அணிவகுப்பு நடத்த வேண்டியிருக்கும்,

சட்டத்தரணி ஆர். ஸ்ரீ சிவாயா: பாதுகாப்பு காரணம் கருதி யாழ்ப்பாணத்தில் அணிவகுப்பு நடத்த வேண்டும் என்று பொலிசார் கூறினர். பாதுகாப்பு காரணம் சிறைச்சாலை அதிகாரிகளே கூறவேண்டும். அவர்கள் இங்குவந்து கூறவுல்லை. அவர்கள் கூருத பட்சத்தில், பருத்தித்துறையிலேயே அடையாள அணிவகுப்பை நடத்தலாம்.

ஜி. ஜி. பொன்னம்பலம்: பொலிஸார் 2 சந்தேகநபர்களை தேடுவதாலுல் இன்றைக்கும், அவர்களின் பெயர்களை குறிப்பிட்டு மீண்டும் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கலாம். பொலிஸார் பெயர்களை வெளியிட்டால், தான் உடனடியாக அந்த 2 சந்தேகநபர்களையும் இங்கு ஆஜர் செய்வேன். பெயர் குறிப்பிடாதவரை அந்த சந்தேகநபர்கள் இங்கு ஆஜராகமாட்டார்கள். இதைக் காரணமாக வைத்து சந்தேகநபர் கைதாகவில்லை எனக் கூறி விசாரணை முடியவில்லை என்று பொலிசார் சொல்லமுடியாது. பிணைக்கும் முட்டுக்கட்டை போடமுடியாது.

நீதவான், அடையாள அணிவகுப்பு நடாத்த அனுமதித்து வழக்கை இன்றுவரை ஒத்திவைத்தார். (க)

# நாவற்குழியில் நேற்று....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை, உத்தரதேவிச் சேவையும் சாவகச்சேரியிலிருந்தே நடைபெற்றது. இன்று தபால், காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் ரயில் மூலம் வந்து, பின் அங்கிருந்து சாவகச்சேரிக்கு இ. போ. ச. ரஸ் மூலம் சென்று, சாவகச்சேரியிலிருந்து கொழும்புக்குச் சேவை நடைபெறும்.

## வானெலியில் கலைப்புலவர்

கலைப்புலர் க. நவரத்தினத்தின் 80 வது பிறந்த தினம் நாளையாகும், இதனையொட்டி இன்றிரவு 9-45 மணிக்கு இலங்கை வானெலியின் கலைக்கோலம் நிகழ்ச்சியில் கலைப்புலவரின் ஆன்மீக வாழ்க்கை பற்றி திரு. கா. மாணிக்க வாசகர் உரையாற்றுவார். (அ)

## நாடகப் போட்டி முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணிச் சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு இயக்கத்துக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட நாடகப் பிரதிப் போட்டி முடிவுத்திகதி, அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 7ந் திகதி என அறிவிக்கப்பட்ட முடிவுத் திகதி, எதிர்வரும் 20ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடகப் பிரதிகளை, நாடகப் பொறுப்பாளர், 238, பிராதன வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (கூ)

## வரட்சிக்குப்பின் பலத்தமழை

(பண்டத்தரிப்பு)

நீண்டகால வரட்சிக்குப் பின்னர் பண்டத்தரிப்பு பிரதேசத்திலும் சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, ஆகிய பகுதிகளிலும் பலத்த மழைபெய்துள்ளதைத் தொடர்ந்து இப்பகுதிகளிலுள்ள விவசாயிகள் காலபோக நெல் விதைப்பு வேலைகளை ஆரம்பித்துள்ளனர். (உ)

## சிறப்பு மலர்

கிளிநொச்சி கந்த சுவாமி கோவில் தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் நாளை வெளிவரும்.

## வாரியார் விருந்து

ஒன்றேகுலம் ஒருவனே தேவன் எனும் தத்துவத்தின் அடிப்படையில் எழுந்ததே சைவம். சைவம் குறிக்கும் சிவமே முழுதற் கடவுள். சுவடிவான வன் இறைவன், தீயினது சூடு அம்பிகை. தீயினின்று வெளிப்படும் செம்மை நிறம் கணபதி; தீயிலிருந்து வெளிப்படும் பிரகாசம் முருகனுகும்.

[எஸ். கே. எஸ்.]

பல்கலைக்கழக வளாகங்களில்

# ஒழுங்கீனம் என்றுமே அனுமதிக்கப்படமாட்டாது

## பெற்ருேர்மத்தியில் கல்விஅமைச்சர் உறுதி

(கொழும்பு)

''பல்கலைக்கழகம், உயர் கல்வியின் கேந்திர ஸ்தானமாக விளங்குகிறது. இங்கு சிறந்த ஒழுக்க நெறியும், உயர்ந்த இலட்சியமும், சிறந்த ஆராய்ச்சியும் பெருகதாலும் வேண்டுமே தவிரக் கூக்குரலும், ஒழுங்கீனமும் நிகழக் கூடாது. நான் இந்நாட்டின் கல்வியமைச்சராக இருக்கும் வரை பல்கலைக்கழகங்களில் எந்தக் குழப்பங்களையும், காடைத்தனத்தையும் அனுமதிக்கமாட்டேன்.''

இவ்வாறு கொழும்பு நவரங்ககலா மண்டபத்தில் 1978ம் ஆண்டு, பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றேர்கள் மத்தியில், கல்வியமைச்சர் கலாநிதி நிசங்கா விஜயரத்ன கூறினுர்.

திரு. ஸ்ரீவர்த்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு.விஜரத்ன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; ''முன்னைய அரசாங்கம் ஒடைப்பிடித்த தரப்படுத்தல் குறித்து, பெற்ருேராகிய உங்கள் மனதில் ஒரு பயம் நீண்டகாலமாக இருந்துவந்ததை நாம் அறிவோம் தரப்படுத்தலினுல் சிறந்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிருர்கள் என்பதை மனதிற்கொண்டு தரப்படுத்தலை நீக்கி, மாணவர்கள் பரீட்சையில் பெற்ற புள்ளிகளை அடிப்படையாக வைத்து, இம்முறை பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவுசெய்துள்ளோம். இம்முறையை நாம் கையாண்டதினுல் மன்னுர், அம்பாந்தோட்டை, வவனியாப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பாதிப்படைந்ததாலும், அவர்களில் பலரையும் நாம் இம்முறை பல்கலைக்கழகத்தில் அனுமதித்துள்ளோம். எதிர்காலத்தில் இக் குறையையும் தீர்த்துவைக்க எண்ணியுள்ளோம்.

### ஆங்கிலம் மூலம் பல்கலைக்கழகக் கல்வி

''எந்த மொழி மூலம் மாணவர்கள் கல்வி கற்ருர்களோ அம்மொழி மூலமே அவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற அனுமதிக்கப்படுவர். ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவர்களுச்கு பல்கலைக்ழகத்தில் கல்வி பெற வசதி செய்யப்படும்.

பல்கலைக்சழகத்தில் அனுமதி பெறத் தவறும் மாணவர்களும் திறந்தவெளிப்பல்கலைக்கழகத்தின் மூலம் தமது பட்டப்படிப்பைமேற்கொள்ள அனுமதிக்கப்படுவர். கல்வியை எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கவே நாம் இந் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

''பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறும் மாணவர்களின் ஒழுக்க சீர்கேடுகள் குறித்து பல பெற்ருேர் கிலேசமும் அடக்கமும் கொண்டவர்களாக இருப்பதை நான் அறிவேன். ஆகவே என்னுடைய பதவிக்காலத்தில் எந்தவகையிலும் பல்கலைக் கழகங்களில் ஒழுங்கீனத்தையும் அமைதியின்மையையும் அனுமதிக்கமாட்டேன்.

பெற்ருேராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகள் பல்கலைக்கழகங்களில் சிறந்த கல்வியையும் சிறந்த ஒழுக்கமுறைகளையும் கற்றுக்கொள்கிருர்களா என்று பார்த்துக் கொள்ளவேண்டும், ஒவ்வொரு மாதமும் நீங்கள் விரும்பினுல் உங்கள் பிள்ளைகள் கல்வி பயிலவும் பல்கலைக் கழகங்களைப் போய் பார்வையிடலாம். அப்படிப் பார்க்க உங்களுக்கு உரிமையுண்டு. அங்கு ஏதும் வசதியீனங்கள் இருப்பின் எமது கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். அவைகளை உடன் நீக்க நடவடிக்கை எடுப்பேன்''.

இக் கூட்டத்தில் பல்கலைக் கழக வளாகங்களின் தலைவர்களும் கல்வியதிகாரிகளும் கலந்துகொண்டதுடன் இவ் வருடம் இலங்கைப் பல்கலைக் கழக சகல வளாகங்களிலும் அனுமதிபெறும் சகல சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்களின் பெற்ருேர்சள் சகலரும் கலந்துகொண்டனர்.

கல்வியமைச்சரின் பேச்சைக்கல்விப்பகுதியைச்சேர்ந்த வித்தியாதிபதி திரு. இலட்சுமனஐயர் தமிழில் மொழி பெயர்த்தார். கூட்டத்தில் பெற்ருேரால் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு பல்கலைக் கழகப் பிரிவுகளின் தலைவர்கள் பதிலளித்தனர். (அரி. நி)

சாவகச்சேரி நீதிமன்ற

# துப்பாக்கிகள் கொள்ளை வழக்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்றத் துப்பாக்கிகள் கொள்ளை தொடர்பான வழக்கு, இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதவான் கே. பாலகிட்ணர் முன்னிலையில் கூப்பிடப்படவிருக்கிறது.

இக்கொள்ளை தொடர்பாக இதுவரை சந்தேகத்தின்பேரில் 42 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். கொள்ளையடிக்கப்பட்ட துப்பாக்கிகள், றிவோல்வர்களும் பொலிசாரினுல் கைப்பற்றப்பட்டுள்ளது.

இஉவழக்குத் தொடர்பான சந்தேகநபர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர். (க)

## நவாலியில் முல்லைச்சகோதரிகள் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

நவாலி முருகமூர்த்திகோயில் சப்பரத் திருவிழாவான இன்றிரவு முல்லைச்சகோதரிகளின் இசைக் கச்சேரியும், நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக சுவாமிகளின் கந்த புராண விரிவுரையும் மற்றும் பல நிகழ்ச்சிகளும் நடைபெறும். (ஊ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box 49, Telegram Eelanaadu' Telephone 389. Registred as a Newspaper in Srilanka